**C.C.No.11/2011** **02.07.2025**

**எதிரி தரப்பில் பிரிவு 311 Cr.P.C.–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டு, மீண்டும் PW4 அழைக்கப்பட்டு மறுவிசாரணை**

**Pw4– வள்ளிநாயகம், த/பெ பாலு**

1) நான் என்ன படித்துள்ளேன் என்றால், எதுவும் படிக்கவில்லை, எழுதத்தெரியுமா என்றால், எனது கையொப்பம் மட்டும் செய்யத்தெரியும். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால், தற்போது சில்வர் பட்டறையில் டிங்கராக வேலை செய்கிறேன். நான் செம்பு, சட்டி போன்ற பொருட்களை தயார் செய்யும் வேலை செய்து வருகிறேன். அதுபோன்ற வேலைகள் செய்யும் போது, சடார் சடார் என்று சத்தம் கேட்கும் என்றால், சரிதான். எங்கள் பட்டறையை சுற்றி எத்தனை பட்டறைகள் உள்ளது என்றால், 10 பட்டறைகளுக்கு மேல் இருக்கும். அதனால் அந்த இடமே சத்தம் அதிகமாக இருக்கும் என்றால், சரிதான். பொருட்கள் தயாரிப்பதற்கான மூலப்பொருட்கள் அதிகமாக இருந்தால், இரவும் வேலை செய்வோம் என்றால், சரிதான். நான் காலை எத்தனை மணிக்கு பட்டறைக்கு செல்வேன் என்றால், காலை 09.00 மணிக்கு செல்வேன். எத்தனை மணிக்கு வீட்டிற்கு திரும்புவேன் என்றால், இரவு 10.00 மணி ஆகும். பின்பு சாப்பிட்டு துாங்க எத்தனை மணி ஆகும் என்றால், இரவு 12.00 மணி ஆகும்.

2) வேலை பார்த்து வருவதால், உடல்சோர்வாக இருக்குமா என்றால், இருக்கும். அதனால் நான் வேலை முடித்து வந்து துாங்கிவிடுவேன் என்றால் சரிதான். எங்கள் வீட்டின் குளியலறை எங்கு உள்ளது என்றால், வீட்டிற்கு வெளியே உள்ளது. வேலை முடித்து வந்ததும் குளித்து விட்டு, தொலைகாட்சி பார்த்துக்கொண்டே சாப்பிடுவேனா என்றால், சரிதான். சாப்பிட்டு முடிக்க இரவு 11.00 மணி ஆகும். இறந்துபோனவரின் பெயர் என்னவென்றால், சேதுராமன். அவரை எந்த மருத்துவமனையில் சென்று பார்த்தேன் என்றால், மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் சென்று பார்த்தேன். இறந்துபோனவரை யார் மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார்கள் என்றால், சாட்சி கண்ணன் அழைத்து சென்றார்.

3) மருத்துவமனைக்கு போலீசார் வந்தார்களா என்றால், நான் இருக்கும்போது வரவில்லை. எப்போது மருத்துவமனைக்கு சென்றேன் என்றால், சம்பவம் நடந்து அரைமணி நேரத்தில் சென்றுவிட்டேன். சம்பவம் குறித்து தெரிந்தவுடன் மருத்துவமனைக்கு சென்றுவிட்டேனா என்றால், சரிதான். சம்பவம் நடைபெற்ற இடத்திற்கும், எனது வீட்டிற்கும் எவ்வளவு துாரம் இருக்குமென்றால், 3 தெரு தள்ளி இருக்கும்.

4) நான் முதல்விசாரணையிலும், போலீஸ் விசாரணையிலும் சொன்னது போல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை, அவர் இறப்பிற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை, அவர் வாய்க்காலில் தவறி விழுந்ததன் காரணமாக இறப்பு ஏற்பட்டது, இந்த சம்பவம் குறித்து எனக்கு எந்த விவரமும் தெரியாது என்றால், சரியல்ல.